# செய்திகளும் குறிப்புகளும்

**06.08.2026, ஆரோவில்வாசிகளுக்கான தமிழ் வார ஏடு, ஆரோட்ரடுக்ஷன், எண்: 1172**

---

**ஸ்ரீ அரவிந்தர்**

**பகவத்கீதை – பேருரைகள் - 22. குணங்களுக்கு அப்பால்**

ஆனால், அது முற்றிலும் மதிமயக்கமல்ல; சரியான நிலையில் நின்று விஷயத்தை நோக்காதிருப்பதே அதன் தவறு. அகந்தையானது தானே உண்மையான சீவன் என எண்ணிக்கொண்டு, தானே உண்மையான மையம் போலவும் தன்பொருட்டே யாவும் உள்ளது போலவும் செயல்புரிகிறது. விஷயத்தை இவ்வண்ணமாக நோக்குவதில்தான் அதன் தவறு உளது. நமக்குள்ளேயும் உள்ள ஏதோ ஒன்றே செயலின் உண்மையான மையம் என்றும். அதன்பொருட்டே யாவுமுள என்றும் எண்ணுமானால், அது தவறு செய்வதாகாது. ஆனால், அந்த ஒன்று அகந்தையல்ல; நமது உள்ளத்தின் மறைவில் உறையும் இறைவனே, தெய்விக புருஷனே அது. நமக்குள் ஓர் உண்மையான சீவன் உள்ளது. அதுவே யாவற்றிற்கும் அதிபன். அதன் கட்டளைப்படியே இயற்கை தொழில் புரிகிறது. இதுவே உண்மை. இவ்வுண்மையின் சிதைந்த, உருவிழந்த சாயையே நமது மனத்தில் எழுகின்றது. அகந்தையின் தன்மூப்பே அது. நமக்குள்ளே ஒரு சுதந்திர சீவன் (ஆன்மா) உள்ளது. அதன் சித்தத்தின் மாறுதலடைந்ததும் அரைகுறையானதுமான பிரதிபிம்பமே நாம் இயற்கையில் காணும் சித்தம். இவ்வுண்மையின் விரூபமே சுயேச்சையைப்பற்றி அகந்தை கொள்ளும் கருத்து.

நாம் அபிவிருத்தியடையுங்கால், சீவனின் உண்மையை அறிந்துகொள்ளுவதற்கு நாம் தயாராக இருக்கும் ஒரு காலம் அவசியம் வந்தாகவேண்டும். அப்போது, நமது அகந்தை சுயேச்சையைப்பற்றி கொள்ளும் தவறான கருத்து நம்மிடமிருந்து நழுவியாக வேண்டும். அகந்தையின் சுயேச்சைக் கருத்தைத் தள்ளிவிடுவதால், செயல்களையும் நிறுத்திவிட வேண்டுமென்பதல்ல. ஏனெனில், இயற்கையே செயல்புரிகின்றாள். இந்த அகந்தை நோக்கு ஏற்படுமுன் எவ்விதம் செயல்புரிந்து வந்தாளோ, அம்மாதிரியாகவே அது ஒழிந்த. பின்னரும் அவள் செயல்புரிகிறாள். அதை ஒழித்த மனிதனிடம் இன்னும் மகத்தான காரியங்களையும் அவள் செய்யமுடிகிறது. ஏனெனில், அந்த நிலைமையில் அவனது மனம் இயற்கையின் தொழிற்பாடுகளின் இரகசியங்களை நன்கு அறிந்துகொள்ளுவதுடன், அவளுக்கு இயைந்த கருவியாயும் ஆகிறது. ஆனால், சுயேச்சை என்னும் எண்ணத்தை விட்டொழித்து நம்முள்ளேயுள்ள உண்மையான ஆன்மாவின் தரிசனம் சிறிதும் பெறாமல், எல்லாம் தலையெழுத்து, விதி அல்லது இயற்கையின் நிருணயமே என்னும் மனப்பான்மையுடன் சும்மாயிருந்து விடக்கூடாது. ஏனெனில், இவ்விதமிருப்பின், அகந்தையே நமது சீவனைப்பற்றிய ஒரே கருத்தாக இருக்கும்; இயற்கையின் கருவியாகவே எப்போதுமுள்ள அந்த அகந்தையின் மூலமாகவே நாம் இன்னும் செயல் புரிவோம். நமது சித்தமும் அவளது கருவியாக இருக்கும். இதனால் நமது மனப்போக்கில் ஒரு மாறுதலேற்படலாமேயொழிய உண்மையான மாறுதல் எதுவும் ஏற்படாது.தோற்ற உண்மையான இயற்கையின் நிருணயத்தை ஒப்புக்கொண்டு அவளுக்கு அடிமைப்பட்டிருப்போம். குணங்களின் தொழிற்பாடுகளுக்கு அப்பாலுள்ள பிறப்பற்ற ஆத்மாவை நாம் அறியாமலிருப்போம். நமது விடுதலையின் வாயில் எங்குள்ளது என்பதைக் காணாமலிருப்பதோடு, இயற்கையும் அகந்தையுமே நமது எல்லாமாக இருக்கும். சுதந்திர ஆன்மா அல்லது புருஷன் தனித்தே நிற்பான்.

புருஷனுடைய இச்சுதந்திரம் எதில் உள்ளது? சாங்கிய தத்துவத்தின்படி,புருஷன் செயலற்று இருப்பதால்தான் சுதந்திரமாக இருக்கிறான். ஆனால், செயலின் சாயை தன் மீது படும்படி இயற்கைக்கு அவன் அனுமதி தரும்போது, தோற்ற உலகின் விவகாரப்படி அவன் குணங்களின் செயல்களால் பந்தப்பட்டவனாகிறான். அவன் இயற்கையுடன் வைத்துக்கொண்டிருக்கும் சம்பந்தத்தை அறுத்து, அவளுடைய தொழிற்பாடுகளை நிறுத்தினாலொழிய, சுதந்திரத்தை அவன் மீண்டும் அடைய முடியாது. அதே மாதிரி, மனிதன் தான் செயலற்றிருப்பதாயும், இயற்கையே தன் குணங்களின் மூலமாகத் தொழில் செய்கிறாளென்றும் திடமாகக் கொள்வானாகில், அதே பலன் அவனிடத்திலும் உண்டாகுமல்லவா? சாங்கிய புருஷன் அனுமதி அளிப்பவன்; செயல்புரிவதெல்லாம் இயற்கை. அவன் சாட்சிபூதனாக நின்று ஆதரிப்பவனே. இயற்கையின் திருவிளையாடலைத் தானே திட்டஞ்செய்து தன்னிலே நடத்துவோனாயும், சாட்சிபூதனாக நின்று கவனிப்பதோடு, அதைக் கட்டுப்படுத்துவோனாயுமுள்ள பிரபஞ்ச தேவன் அல்லன் அவன். அவன் அனுமதிப்பதனாலேயே இயற்கையின் திருவிளையாடல் நடக்கிறது. அவனது இன்பத்தின் பொருட்டும், அவனது ஆதரவைக் கொண்டுமே இயற்கை செயல் புரிகிறாள். அவன் அனுமதியை வாபசு பெற்றுக்கொண்டு, தன் ஆதரவை நிறுத்திவிட்டால், செயலும் நின்று விடுகிறது. ஆனால், புருஷன் பிரகிருதியின் தொடர்புகளைப்பற்றி கீதை கொள்ளும் கருத்து சாங்கியத்தின் கருத்தல்ல. இரண்டிலும் இயக்கம் ஒன்றேயாயினும், பலன் வெவ்வேறாக உள்ளது. சாங்கியத்தில் புருஷன் விலகிவிட்டால் செயலும் நின்றுவிடுகிறது. ஆனால், கீதையில் தன்னலப்பற்றில்லாத, மகத்தான தெய்விகச் செயல் அதன் பின்னும் நடைபெறுகிறது. சாங்கியத்தில் ஆன்மாவும் இயற்கையும் இரு வெவ்வேறான உறுப்புக்கள். கீதையில், அவை ஒரே சுயம்புவான சீவனின் இரு அம்சங்கள் அல்லது இரு சக்திகளாகும். அதில் ஆன்மா அல்லது புருஷன் அனுமதியளிப்போன் மட்டுமல்லன்; அவன் இயற்கையின் அதிபன், ஈசுவரன். அவன் அவள் மூலமாக உலக விளையாட்டை அனுபவிக்கிறான்; அவள் மூலமாகத் தன் தெய்விக இச்சையையும் ஞானத்தையும் நிறைவேற்றுகிறாள். விஷயங்களின் திட்டத்திற்கு ஆதாரமாயிருப்பது அவன் அனுமதியே. ஊடுருவியுள்ள அவனது சாந்நித்தியத்தினாலேயே அத்திட்டம் நிலைத்துள்ளது; அது அவனது உண்மையிலேயே உளது; அவனது சுயதருமத்தின்படியும் உணர்வுள்ள சித்தத்தின்படியுமே ஒழுங்குபடுத்தப்படுகின்றது. இந்த ஆன்மா அல்லது புருஷனின் தெய்விக பாவத்தையும் இயல்பையும் அறிந்து, அவற்றிற்கு இணங்கி, அவற்றில் வாழ்வதே, அகந்தையினின்றும் அதன் செயலிலிருந்தும் விலகி நிற்பதன் கருத்தாகும். உயரிய தெய்விக இயல்பை அடையும் பொருட்டே ஒருவன் குணங்களின் கீழ்த்தர இயற்கைக்கு மேல்உயர்ந்து செல்லுகிறான்.

இந்த ஏற்றத்தை நிர்ணயிக்கும் இயக்கமானது, ஆன்மா தான் இயற்கையுடன் வைத்துக்கொள்ளும் தொடர்புகளில் அமரும் சிக்கலான நிறையிலிருந்து வருகின்றது. அது மூவிதப் புருஷனைப்பற்றி கீதை கொள்ளும் கருத்தைப் பொறுத்திருக்கிறது. இயற்கையின் செயல்களுக்கும் மாறுதல்களுக்கும் உயிரும் ஊக்கமும் அளிக்கும் ஆன்மா, க்ஷரன் (மாறுதலும் அழிவும் உள்ளவன்) ஆவான். அவளுடைய மாறுதல்களுடன் அவனும் மாறுவது போலவும் அவளது இயக்கத்துடன் அவனும் இயங்குவது போலவும் காணப்படுகிறான். இயற்கை தொடர்ச்சியாகச் செய்து கொண்டேபோகும் செய்கையினால் தான் எவ்விதம் மாறுதலைடைகிறான் என்பதைத் தன் உள்ளக்கருத்தில் கவனிக்கிறான். இயற்கையும் க்ஷரம் அல்லது அழிவு உடையவளே. ஏனெனில் அவளும் கால அளவில் இடைவிடாமல் இயங்கியும் மாறுதலடைந்தும்வருகிறாள். ஆனால், இந்த இயற்கை ஆன்மாவின் நிருவாக சக்தியேயாவாள். அவனுக்கு உள்ளதிலிருந்தே அவளும் உண்டாகமுடியும். அவனுக்கு எது சாத்தியமோ அதன்படித்தான் அவளும் செய்யமுடியும், அவனது இருக்கையிலிருந்து உண்டாகக்கூடியதை உண்டாக்குகிறாள். அவளது கருமம் ஆன்மாவின் சுபாவத்தினால் நிருணயிக்கப்படுகின்றது. அவள் செயலாகவும், மாறுதலாகவும், சிருஷ்டியாகவும் திகழ்கிறாள். இவற்றை நிறைவேற்றும் சக்தியும் அவளே. ஆனால், சேதன ஆன்மாவினிடமிருந்தே இந்த சக்தி வருகின்றது. அவனது சேதனத்தின் ஒளியிலிருந்தே, தன் கருமங்களுடன் மாறுதலடையும் உணர்வை அவள் பெறுகிறாள். அந்த ஆன்மாவின் சேதன சித்தத்திலிருந்தே, மாறுதலடையும் சித்தத்தையும் பெறுகிறாள். *(தொடரும்....)*

## த க வ ல் க ள் ( I N F O R M A T I O N )

**ஆரோவில்லின் பெயர் மற்றும் சின்னத்தின் பாதுகாப்பு (Protection of the Name and Symbol of Auroville)**

**"ஆரோவில்" என்ற பெயரும் அதன் அதிகாரப்பூர்வ சின்னமும் (முத்திரை)** சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாட்டைத் தடுத்தல்) சட்டத்தின் கீழ் பாதுகாக்கப்படுகின்றன.
2015 முதல், ஆரோவில் பவுண்டேஷன் அங்கத்தினர்களாக இல்லாத தனிநபர்கள் மற்றும் நிறுவனங்கள், குறிப்பாக வணிக நோக்கங்களுக்காக, அதன் பெயரையும் சின்னத்தையும் அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத்துவதைத் தடுக்க ஆரோவில் தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது. 2026 ஏப்ரல் முதல், முன்னர் இயங்கி வந்த பெயர் மற்றும் சின்னப் பாதுகாப்புக் குழுவிற்குப் பதிலாக, இந்தப் பொறுப்பானது ஆரோவில் சட்டப் பிரிவின் கீழ் உள்ள பெயர் மற்றும் சின்னப் பாதுகாப்புப் பிரிவால் மேற்கொள்ளப்படுகிறது.
சமீபத்தில், ஆரோவில் அல்லாத ஒரு நிறுவனத்தின் இணையதளத்தில் "ஆரோவில்" என்ற பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பது எங்கள் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அவர்களைத் தொடர்பு கொண்டபோது, அந்த இணையதளம் ஒரு ஆரோவில்வாசியால் உருவாக்கப்பட்டது என்று அந்த அமைப்பு எங்களுக்குத் தெரிவித்தது. இதை அறிந்து நாங்கள் மிகுந்த கவலை அடைந்தோம்.

சின்னங்கள் மற்றும் பெயர்கள் (முறையற்ற பயன்பாட்டைத் தடுத்தல்) சட்டத்தின் விதிகளின்படி, ஆரோவில் பவுண்டேஷனின் ஒரு பகுதியாக இல்லாத எந்தவொரு தனிநபரோ அல்லது நிறுவனமோ "ஆரோவில்" என்ற பெயரை அங்கீகரிக்கப்படாத முறையில் பயன்படுத்துவது, அவர்களின் பொருட்கள், சேவைகள் அல்லது செயல்பாடுகள் ஆரோவில்லுடன் அதிகாரப்பூர்வமாகத் தொடர்புடையவை அல்லது ஆரோவில்லால் அங்கீகரிக்கப்பட்டவை என்ற தவறான எண்ணத்தை ஏற்படுத்தக்கூடும் என்பதை ஆரோவில் குடியிருப்பாளர்கள் கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். அத்தகைய பயன்பாடு சட்டத்தின் மீறலாகக் கருதப்படுகிறது.
எனவே, ஆரோவில்வாசி அல்லாத தனிநபர்கள், நிறுவனங்கள் அல்லது வணிகங்களுக்காக இணையதளங்கள், விளம்பரப் பொருட்கள், பிராண்டிங் அல்லது பொதுமக்களின் பார்வைக்குரிய எந்தவொரு பொது உள்ளடக்கத்தையும் வடிவமைக்கும்போது, அனைத்து ஆரோவில் குடியிருப்பாளர்களும் உரிய கவனத்துடன் செயல்படுமாறும், முறையான அனுமதி பெறாமல் ஆரோவில்லின் பெயர் அல்லது சின்னத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறும் கேட்டுக்கொள்கிறோம்.
ஆரோவில்லின் பெயர் மற்றும் சின்னத்தின் பாதுகாப்பு அல்லது அதன் அனுமதிக்கப்பட்ட பயன்பாடு தொடர்பாக ஏதேனும் விளக்கம் வேண்டுமெனில் தயவு செய்து பின்வரும் மின்னஞ்சலில் தொடர்புகொள்ளவும். nameprotection-legal@auroville.org.in
அன்புடன், *வினோதினி - பெயர் மற்றும் சின்னப் பாதுகாப்புப் பிரிவின் ஒருங்கிணைப்பாளர்,*
*சிந்துஜா - சட்ட ஒருங்கிணைப்பாளர்*

## அ றி வி ப் பு க ள் ( A n n o u n c e m e n t s )

**மாத்ரிமந்திரில் 'சாவித்திரி' வாசிப்பு (Savitri reading in Matrimandir)**

அன்பார்ந்த நண்பர்களே,
ஆகஸ்ட் 1 முதல் 14 வரை, திங்கள் முதல் சனி வரை தினமும் காலை 6:30 மணி முதல் 7:00 மணி வரை மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டரில் 'சாவித்திரி' வாசிப்பு நடைபெறும்.

இது ஆரோவில்வாசிகள், புதிதாய்ச்சேர்ந்தவர்கள், 'ஆரோ-கார்டு' வைத்திருக்கும் விருந்தினர்களுக்கு மட்டுமேயானது.
அலுவலக கேட் வழியாகக் காலை 6:15 மணிக்குள் உள்ளே நுழைய வேண்டும்.
விருந்தினர்கள் தங்கள் 'ஆரோ-கார்டை' உடன் கொண்டு வரவும்; அனுமதி ஆம்பித்தியேட்டர் பகுதிக்கு மட்டுமே உண்டு.
அனைவரும் தங்கள் மொபைல் போனை வீட்டிலேயே வைத்துவிட்டு வரவும்.
காலை 7:15 மணிக்குள் வெளியேற வேண்டும்.

**மாத்ரிமந்திரில் நடைபெறும் ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாள் விழாவிற்கு - தன்னார்வலர்கள் தேவை**
**(Sri Aurobindo's Birthday in Matrimandir - seeking for Volunteers)**

அன்பார்ந்த நண்பர்களே,
நாம் ஸ்ரீ அரவிந்தரின் பிறந்தநாளைக் கொண்டாட இருக்கிறோம். இவ்விழாவிற்கு வருகை தரும் மக்களை வழிநடத்தவும், குறிப்பாக காலை தியானம் மற்றும் போன்ஃபயர் ஆகியவற்றில் பங்கேற்பவர்களுக்கு உதவவும், மாத்ரிமந்திருக்கு குறைந்தது 12 தன்னார்வலர்கள் தேவை.

தன்னார்வலராக இந்நிகழ்வுகளுக்குப் பங்களிக்க உங்களுக்கு ஆர்வம் இருந்தால், தயவுசெய்து matrimandir@auroville.org.inஎன்ற என்ற மின்னஞ்சல் முகவரிக்கு உங்களது தொலைபேசி எண்ணை அனுப்பி வைக்கவும்.

தங்களது பங்களிப்பிற்கு முன்கூட்டியே நன்றி தெரிவித்துக்கொள்கிறோம். அன்புடன், *மாத்ரிமந்திர் நிர்வாகிகள்*

**சர்வதேச இளைஞர் தின விழா: இளைஞர்களுக்காக இளைஞர்களால் முன்னெடுக்கும் விழா**
**(International Youth Day Festival, A Celebration of Youth by Youth)**

அன்பார்ந்த சமூகத்தினருக்கு,
இளைஞர்களின் சிந்தனைகள், கற்பனைத்திறன், துணிச்சல் மற்றும் தலைமைத்துவத்திற்கு அர்ப்பணிக்கப்பட்ட 'சர்வதேச இளைஞர் தின விழா 2026'-ல் பங்கேற்க, ஆரோவில் சமூகத்தினராகிய உங்களை யூத் லிங்கில் ஒன்றுகூட அழைப்பு விடுக்கிறோம்.
பிற்பகல் முதல் இரவு வரை நடைபெறும் இந்நிகழ்வில், இளைஞர்கள் தங்கள் படைப்பாற்றல், கேள்விகள், பணிகள், அனுபவங்கள் மற்றும் எதிர்காலக் கனவுகளைப் பகிர்ந்துகொள்வார்கள். உங்களை ஊக்கப்படுத்தும் விஷயங்களைக் கண்டறியவும், எதிர்காலத்தின் மீது ஆழ்ந்த அக்கறை கொண்ட மற்றவர்களைச் சந்திக்கவும், ஒரு தலைமுறை ஒன்றிணைந்து செயல்படத் தொடங்கும்போது எத்தகைய சாத்தியங்கள் உருவாகின்றன என்பதை நேரில் உணரவும் இது ஒரு சிறந்த களமாக அமையும்.
நீங்கள் எங்களுடன் இணைவீர்கள் என்று நம்புகிறோம்.
**சர்வதேச இளைஞர் தின விழா 2026, 15.08.2026, சனியன்று, மாலை 4 மணி முதல் இரவு 9 மணி வரை, யூத் லிங்கில்** நடைபெறும்.

## பிராணசக்தி: ஓர் அழைப்பு (Pranashakti: An Invitation)

பிராணசக்தி என்பது ஆரோவில்லில் 'உயிர்நிலை சார்ந்த கல்வி' குறித்த ஓர் தொடர் தேடலாகும். துடிப்பான, ஆக்கப்பூர்வமான மற்றும் உடல் சார்ந்த கற்றல் முறைகள், புலன்கள், உணர்ச்சிகள், குணநலன்களைச் செம்மைப்படுத்துவதுடன் ஆற்றலை உணர்வுபூர்வமாக எவ்வாறு பயன்படுத்துவது என்பதை இது ஆராய்கிறது. இந்த முயற்சி, ஆரோவில்லில் ஏற்கனவே 'உயிர்நிலை சார்ந்த கல்வியின்' பல்வேறு அம்சங்களை ஊக்குவித்து வரும் பல நபர்கள், நடைமுறைகள் மற்றும் இடங்களை ஒன்றிணைப்பதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது.

### ஜூலை - ஆகஸ்ட் மாதங்களுக்கான நிகழ்வுகளின் விவரங்கள்

### உடலைப் பேணுதல் (Cultivating the Body)

வளர்ச்சிக்கான ஒரு கருவியாக உடலைப் புரிந்துகொண்டு, வலிமை, சமநிலை, சகிப்புத்தன்மை மற்றும் விழிப்புணர்வை வளர்ப்பதற்கான ஒரு மணிநேரப் பயிற்சி.
**ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் வெள்ளிக்கிழமை | மாலை 5-6 மணிக்கு**
**ஏடிபி மூலம் புலன்களுக்குப் பயிற்சி** (Training of the Senses through ATB): வழிநடத்துபவர் - ஷைலி

**ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் வெள்ளிக்கிழமை | மாலை 5-6 மணிக்கு**
**க்ராவ் மகா (தற்காப்புக்கலை) (Krav Maga), வழிநடத்துபவர்: மலாய்கா (சனியன்று | காலை 6-7.30 மணி**

மிதிவண்டி சவாரி (Cycling), **வழிநடத்துபவர்: சூர்யகாந்தி**. பதிவு செய்ய: https://forms.gle/ikE6TEeZDe4VWz9Z7

### உணர்ச்சிகளைப் பண்படுத்துதல் (Cultivating the Emotions)

**சனிக்கிழமை தோறும் | மதியம் 3.30-4.30 மணி, நவரசம், வழிநடத்துபவர்: வர்ஷா**

நாட்டிய சாஸ்திரத்தால் ஈர்க்கப்பட்ட 3-பகுதிப் பயணத்தின் மூலம், உணர்வுபூர்வமாக உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் கலையை ஆராய்தல். நாம் அனைவரும் சேர்ந்து நவரசங்களின் உலகிற்குள் நுழைவோம்–சிருங்காரம் (அன்பு/அழகு), ஹாஸ்யம் (மகிழ்ச்சி/நகைச்சுவை), கருணை (கருணை/துக்கம்), ரௌத்ரம் (உக்கிரமான சக்தி/கோபம்), வீரம் (வீரம்), பயானகம் (பயம்), பிபத்ச ரசம் (வெறுப்பு/அருவருப்பு), அத்பூத (வியப்பு), மற்றும் சாந்தம் (அமைதி/நிதானம்).
நாள்: ஆகஸ்ட் 1, 8, 22, 29 | மாலை 3:30 - 4:30 மணி.
4 அமர்வுகளிலும் கலந்துகொள்ளக்கூடிய எவரும் பங்கேற்கலாம்; ஆரோவில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும். பதிவு செய்ய: https://forms.gle/SzKWduuVUvaegR1j8

### தமிழ்க் கவிதை - வழிநடத்துபவர்: மீனாட்சி

தமிழர் பண்பாடு மற்றும் கவிதைகள் வாயிலாக 'ஶ்ரீ அன்னை'யின் நான்கு அம்சங்களுடன் இணையும் நிகழ்வு. இதனைத் தமிழ்க் கவிஞரும், பூரணக்கல்வி முறையை முன்னெடுப்பவரும், ஆரோவில்லின் 'இளைஞர்கள் கல்வி மையத்தின் நிறுவனருமான இரா.மீனாட்சி அவர்கள் அன்புடன் வழிநடத்துகிறார்.
**நாள்: ஜூலை 25 மற்றும் ஆகஸ்ட் 1, 8, 15, 22, 29. இடம்: இளைஞர்கள் கல்வி மையம்.**
அனைவருக்குமான பொது நிகழ்வு; ஆரோவில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.
பதிவு செய்ய: https://forms.gle/iW4iN1ARwLB6y88c6 அமைவிடம்: https://share.google/24VdMXz286BAV03xK

**பிராணசக்தி மையம் மற்றும் நூலகம் திறந்திருக்கும் நேரம். வியாழக்கிழமை தோறும் | மதியம் 2 - 4 மணி.**
இது பிற்பகலில் திறந்திருக்கும், இம்மையத்தைப் பார்வையிடவும், இத்திட்டத்தைப் பற்றி மேலும் அறியவும், நூலகத்தைப் பயன்படுத்தவும், கலந்துரையாடல்களில் ஈடுபடவும் அல்லது வாசிப்பதற்கும், சிந்திப்பதற்கும் ஏற்ற அமைதியான சூழலை அனுபவிக்கும் ஒரு வாய்ப்பாக அமையும்.

**எங்கள் தற்போதைய செயல்பாட்டுத் தளங்கள் பின்வருமாறு:**

- ஶ்ரீ அரவிந்தர், ஶ்ரீ அன்னை ஆகியோரின் படைப்புகளைப் பற்றிய ஆய்வு, அத்துடன் பல்வேறு துறைகளைச் சார்ந்த நடைமுறைகள், சுய-சிந்தனை, ஆவணப்படுத்துதல், கூட்டுச் சோதனைகள் ஆகியவற்றின் மூலம் 'பிராணக்கல்வி'க்கான புதிய சாத்தியக்கூறுகளை **ஆராயும் மூன்று மாத கால கூட்டுச் செயல்முறை**.
- பிராணசக்தி தோட்டத்தைச் சுத்தம் செய்தல், எரு தயாரித்தல், வளமான மண்ணைப் பண்படுத்துதல், செடிகளை கத்தரித்தல், நடுதல், நீர்ப்பாய்ச்சுதல் மற்றும் அந்த இடத்திற்குள் புலன்சார் அனுபவங்களை உருவாக்குதல் ஆகியவற்றின் மூலம் **பிராணசக்தி தோட்டத்திற்கு புத்துயிர் அளித்தல்**. ஒழுக்கம், புலன் உணர்வுகளை செம்மைப்படுத்தல், அழகை இரசித்தல், இயற்கையுடன் ஒரு உணர்வுபூர்வமான தொடர்பு ஆகியவற்றின் மூலம் 'பிராணக் கல்வி'யை ஆராய்வதற்கான ஒரு களமாக இத்தோட்டம் திகழ்கிறது.
- கல்வியாளர்கள், குழந்தைகள், இளைஞர்கள், சமூகத்தினருக்கான வெள்ளிக்கிழமை மாலை மற்றும் சனிக்கிழமை காலை நேர நிகழ்வுகள். உடல் பயிற்சி, புலன் உணர்வுகளை செம்மைப்படுத்தல், உணர்ச்சிசார் கற்றல் மற்றும் ஆற்றலை உணர்வுபூர்வமாகப் பயன்படுத்துதல் ஆகியவற்றிற்கு உதவும் அனுபவங்களை உருவாக்க, கலை, நடனம், இசை, நாடகம் மற்றும் உடல் சார்ந்த பிற துறைகளில் ஈடுபடுபவர்களை நாங்கள் எங்களுடன் இணைந்து செயல்பட அழைப்பு விடுக்கிறோம்.

வளர்ந்து வரும் இந்த முயற்சிக்குப் பங்களிக்க விரும்பும் அனைவரையும் நாங்கள் அன்புடன் வரவேற்கிறோம். இந்தப் பணியுடன் உங்களுக்கு ஒருவிதமான ஈடுபாடு அல்லது ஒத்திசைவு இருப்பதாக உணர்ந்தால், உங்கள் ஆர்வத்தை இங்கே பகிர்ந்து கொள்ளுமாறு உங்களை கேட்டுக்கொள்கிறோம்: https://forms.gle/6bhrqRB1XCxvMLtJ9

'பிராணசக்தி' என்பது ஆரோவில்லில் 'பிராணக்கல்வி' குறித்த ஒரு தொடர் தேடலாகும். துடிப்பான, ஆக்கபூர்வமான மற்றும் உடல்சார்ந்த கற்றல் முறைகள் மூலம் புலன்கள், உணர்ச்சிகள் மற்றும் ஆளுமை ஆகியவற்றைச் செம்மைப்படுத்துவது குறித்தும், ஆற்றலை உணர்வுபூர்வமாகப் பயன்படுத்துவது குறித்தும் இது ஆராய்கிறது. 'பிராணக்கல்வியின்' பல்வேறு பரிமாணங்களை ஏற்கனவே வளர்த்து வரும் ஆரோவில்லின் பல நபர்கள், நடைமுறைகள் மற்றும் இடங்களை ஒன்றிணைப்பதை இந்த முயற்சி நோக்கமாகக் கொண்டுள்ளது. இந்தத் தேடல் களங்கள் உங்களுக்கு ஆர்வமூட்டுவதாக இருந்தால், உங்களுடன் உரையாடலைத் தொடங்கி, இணைந்து செயல்படுவதற்கான வாய்ப்புகளை ஆராய நாங்கள் விரும்புகிறோம்.

தொடர்புக்கு: pranashakti@auroville.org.in அன்புடன், *ஷைலி, பிராணசக்தி முன்முயற்சி சார்பாக.*


## வீட்டுவசதிச் சேவையில் நியூ பர்த் வீட்டுவசதி விசாரணை மையம் (New Birth Inquiry Desk at Housing)

நியூ பர்த் வீட்டுவசதிப் பிரிவு
உங்கள் வீட்டுவசதிப் பயணத்தைத் தொடங்குவதற்கான ஓர் இடம்.
நியூ பர்த் வீட்டுவசதிப் பிரிவு இப்போது வீட்டுவசதிச் சேவையில் திறக்கப்பட்டுள்ளது.
நீங்கள் நியூ பர்த் திட்டத்தில் சேர ஆர்வமாக இருந்தாலோ, வீட்டுவசதி செயல்முறையைப் புரிந்துகொள்ள விரும்பினாலோ, பங்களிப்பு விருப்பங்களை ஆராய விரும்பினாலோ, அல்லது ஏதேனும் கேள்விகள் இருந்தாலோ, குறிப்பிட்ட நேரங்களில் எங்களைச் சந்திக்க உங்களை அழைக்கிறோம்.

நீங்கள் இப்போதுதான் ஆராயத் தொடங்கினாலும் சரி, அல்லது அடுத்த கட்டத்திற்குச் செல்லத் தயாராக இருந்தாலும் சரி, இந்த உரையாடலை நாங்கள் வரவேற்கிறோம்.

**வேலை நேரம்: காலை 10:00 மணி - மதியம் 12:00 மணி. இடம்: வீட்டுவசதிச் சேவை அலுவலகம்**

இந்த நேரங்களில் உங்களால் வர இயலவில்லை என்றால், நீங்கள் newbirth@auroville.org.in என்ற மின்னஞ்சல் முகவரிக்கும் எழுதலாம். உங்களைச் சந்திப்பதையும், சாத்தியக்கூறுகளை ஒன்றாக ஆராய்வதையும் நாங்கள் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.



ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்

**நிருத்ய வாஹினி (Nritya Vahini)**
**ஜி.ஹம்சவாஹினி, உதயா ராமகிருஷ்ணனின் மாணவி.**
**06 ஆகஸ்டு 2026, வியாழன், மாலை 06:30 மணி.**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்

**Aram and Dharma (அறம் மற்றும் தர்மா)**
**ஸ்ரீ அரவிந்தர் மற்றும் திருவள்ளுவர்** (Sri Aurobindo and Thiruvalluvar) –
**பாலா அவர்கள்**
**06 ஆகஸ்டு 2026, வியாழன், மாலை 4.00 மணி - 5.00 மணி.**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்

**Nature as Teacher (இயற்கையே ஆசிரியர்): தமிழ் இலக்கியப் பாடங்கள்**
**பாலா அவர்கள்**
**07 ஆகஸ்ட் 2026, மாலை 4:00 மணி - 5:00 மணி**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.


---



ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்

**இல்லறம் (ILLARAM) - வாழ்க்கையை வாழ்வதும் நேசிப்பதும் எப்படி - பாலா**
**08 ஆகஸ்ட் 2026, மாலை 4:00 மணி - 5:00 மணி**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு
ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்

**மதுராஸ்டகா (Madhurastaka)**
**கே. ஜோதிர்மயீ பட்நாயக் அவர்களின் ஒடிசி நடன நிகழ்ச்சி**
**09 ஆகஸ்ட் 2026 ஞாயிற்றுக்கிழமை, மாலை 06:30 மணி**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு**
**ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**துறவறம் (Thuravaram):**
**துறவின் மூலம் அக விடுதலையைக் கண்டறிதல் - பாலா**
**10 ஆகஸ்ட் 2026, மாலை 4:00 மணி - 5:00 மணி**
**இடம்: தமிழ் மரபு மையம், பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு**
**ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**பாலா மற்றும் குழுவினரின் கீர்த்தனம் (Kirtan),**
**11 ஆகஸ்ட் 2026, மாலை 06:30 - 07:30 மணி,**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்.**
அனைவரும் வருக.

---



**ஸ்ரீ அரவிந்தரின் 154வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு**
**ஆரோவில், பாரத் நிவாஸ், இந்திய அரங்கம் வழங்கும்**

**பரதநாட்டியம் - ஆர். உதயலட்சுமி**
**12 ஆகஸ்ட் 2026, மாலை 06:30 மணி**
**இடம்: சாச்சு, பாரத் நிவாஸ், ஆரோவில்**
அனைவரும் வருக.

---

## ஆரோவில் உடற்கல்வி அமைப்பின் அறிவிப்பு (Announcement From Auroville Physical Education Body)

ஆரோவில்லில் உடல் தகுதி மற்றும் ஆரோக்கியம் சார்ந்த தேவைகளை நன்கு புரிந்துகொள்வதற்காக, சையரின் கீழ் இயங்கும் 'ஆரோவில் உடற்கல்வி அமைப்பு' ஒரு ஆய்வுப் பணியைத் தொடங்கியுள்ளது.
வயது அல்லது உடல் தகுதி நிலையைப் பொருட்படுத்தாமல், உடலியக்கம், விளையாட்டு மற்றும் நல்வாழ்வு ஆகியவற்றை அனைவருக்கும் எளிதில் கிடைக்கச் செய்வதே இதன் நோக்கமாகும். எது சிறப்பாகச் செயல்படுகிறது, எது விடுபட்டுள்ளது மேலும் மக்கள் சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ நாம் எவ்வாறு உதவலாம் என்பதைப் புரிந்துகொள்ள உங்கள் கருத்துக்கள் எங்களுக்கு உதவும்.

மேலும், ஆரோவில்லில் உடற்கல்வி நடவடிக்கைகளுக்கு உதவவோ அல்லது கற்பிக்கவோ ஆர்வமுள்ள தன்னார்வலர்களும் எங்களுக்குத் தேவைப்படுகிறார்கள். விளையாட்டு, யோகா, உடலியக்கம் அல்லது வெளிப்புறக் கல்வி ஆகியவற்றில் உங்களுக்கு அனுபவம் இருந்தாலோ, அல்லது மற்றவர்கள் சுறுசுறுப்பாக இருக்க உதவுவதில் உங்களுக்கு விருப்பம் இருந்தாலோ, எங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
அதற்கான இணைப்பு இதோ:
https://docs.google.com/forms/d/e/1FAIpQLScH2ah9Q1RAUyzGPAP_6cdtL1uicFMd-_ulprK0zHENTc3dRQ/viewform?usp=header

அன்புடன், *பிரியம்வதா, ஏவிபிஇபி (AVPEB) குழுவின் சார்பாக*

---

## ஆரோவில் நன்கொடை தளம் (Auroville Donation Portal)

ஆரோவில் நன்கொடை தளத்தின் சமீபத்திய மேம்படுத்தல் குறித்து அறிவிப்பதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். இது உங்களது நன்கொடை அனுபவத்தை எளிதாக்குவதோடு, ஆரோவில் திட்டங்களுக்கு ஆதரவளிப்பதற்கான புதிய வழிகளையும் வழங்குகிறது.

**புதிய அம்சங்கள்**
இணையதளத்தில் பல அறிவியல் ஆராய்ச்சி (எஸ்ஆர்) திட்டங்கள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ளன.
தகுதியுள்ள அறிவியல் ஆராய்ச்சித் திட்டங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைகள், வருமான வரிச் சட்டத்தின் பிரிவு 35-ன் (Section 35) கீழ் வரி விலக்கு பெறத் தகுதியானவை. இந்தச் சலுகையைப் பெறத் தேவைப்படும் குறைந்தபட்ச நன்கொடைத் தொகை ₹500 என்பதைத் தயவுசெய்து நினைவில் கொள்ளவும்.
விரைவாகவும் எளிதாகவும் பணம் செலுத்துவதற்கு ஏதுவாக, ஒவ்வொரு திட்டத்திற்கும் தனித்தனியான கியூஆர் குறியீடு (QR code) இப்போது வழங்கப்பட்டுள்ளது.

புதிதாகச் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்களைப் பார்வையிடவும், ஆரோவில்லின் வளர்ச்சிக்கு பங்களிக்கும் இந்த முன்முயற்சிகளுக்கு உங்கள் ஆதரவை வழங்கவும் உங்களை அன்போடு வரவேற்கிறோம்.
திட்டங்களைப் பார்வையிட: https://donate.auroville.org/projects/
**ஆரோவில் திட்டங்கள்:** https://donate.auroville.org/projects/
உங்களது தொடர்ச்சியான தாராள மனப்பான்மைக்கும், ஆதரவிற்கும் எங்களது மனமார்ந்த நன்றி உரித்தாகுக.

இணையக்குழு - *கிரி, அபா, ரூபன், மோனிகா*

Savitri BHAVAN

## ஸ்ரீ அரவிந்தரின் கவிதைகள் - ஓர் ஆய்வு வட்டம் (Sri Aurobindo's Poetry - A Study Circle)



ஸ்ரீ அரவிந்தரின் கவிதைகள் எனும் விலைமதிப்பற்ற பொக்கிஷத்தைப் படிப்பதன் மூலமும், பாராயணம் செய்வதன் மூலமும், சிந்திப்பதன் மூலமும், பகிர்ந்துகொள்வதன் மூலமும் நமது புரிதலையும் அனுபவத்தையும் வளப்படுத்திக்கொள்ள ஓர் 'ஆய்வு வட்டம்' தொடங்க நாங்கள் திட்டமிட்டுள்ளோம். ஸ்ரீ அன்னை இருந்த போது ஆசிரமப் பள்ளியில் மாணவராக இருந்த இக்கவிதைகளை இரசித்து திளைத்து வந்த அரவிந்தரே இக்குழுவை வழிநடத்துவார்.
இந்த ஆய்வு வட்டத்தில் சேர விரும்புவோர், வெள்ளிக்கிழமைத் தோறும், **மாலை 5.30 மணிக்கு சாவித்திரி பவன் கார்டன் அறையில்** நடைபெறும் நிகழ்விற்கு வரவேற்கிறோம்.
உங்களுக்கு இதில் விருப்பம் இருந்தும் நேரில் வர இயலாத சூழல் இருந்தால், தயவுசெய்து சாவித்திரி பவனை (0413 2622922) அல்லது அரவிந்தா அவர்களை (94873 29480) என்ற எண்ணில் தொடர்பு கொண்டு தெரிவிக்கவும்.

## மாத்ரிமந்திர் பகுதியில் குப்பைகள் போடுதல் (Litter in Matrimandir area)

மாத்ரிமந்திர் தோட்டங்களில் விடப்படும் குப்பைகளின் அளவு அதிகரித்துள்ளதை மாத்ரிமந்திர் பணியாளர்கள் கவனித்துள்ளனர். மாத்ரிமந்திர் தோட்டங்கள் சிற்றுண்டிகளோ அல்லது வேறு எந்த வகையான உணவோ உட்கொள்வதற்கான இடங்கள் அல்ல என்பதை உங்களுக்கு நினைவூட்ட விரும்புகிறோம்.
நீங்கள் உணவு உட்கொள்ளவோ அல்லது உங்கள் குழந்தைகளுக்குச் சிற்றுண்டி கொடுக்கவோ விரும்பினால், 'பார்க் ஆஃப் யூனிட்டி' (Park of Unity) பகுதிக்கு வெளியே, அலுவலகத்திற்கு அருகில் அதற்கென ஒதுக்கப்பட்ட இடம் உள்ளது; அங்குச் செல்லும்போது குப்பைகள் எதையும் விட்டுச் செல்லாமல் பார்த்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.
உங்கள் கனிவான ஒத்துழைப்பிற்கு நன்றி. மாத்ரிமந்திர் அணி

## மதர்ஸ் ஃப்ளவர் கார்டன் வாராந்திர நிகழ்வுகள் (Mother's Flower Garden Weekly Activities)

**திங்கள் மற்றும் புதன் - மாலை 5 - 6 மணி வரை** - விஷ்ணு சஹஸ்ரநாமம் மற்றும் லலிதா சஹஸ்ரநாமம் பாராயணம் - **ஆரோ சக்தி குழு**
**செவ்வாய் தோறும் காலை 9 - 9.45 மணி வரை** - நாரத் அவர்கள் வழங்கும் சாவித்திரி பகிர்வு நிகழ்வு
**வெள்ளி தோறும் மாலை 5.30 - 6.30 மணி வரை** - வாசிப்பு வட்டம் – ஸ்ரீ அன்னையின் கேள்வி-பதில்கள் (1956)
லாரி ஸெய்ட்லிட்ஸ் வழிநடத்தும் நிகழ்வு
ஞாயிறு தோறும் காலை 6.30 - 7.30 மணி வரை - பகவத் கீதை பாராயணம். வழிநடத்துபவர் வித்யாமந்திர் அணி.
பௌர்ணமி தோறும் மாலை 6 மணிக்கு - சங்கீதம் அர்ப்பணம் ஆனந்தம் பொங்கும் அர்ப்பணிப்புப் பாடல்கள் மற்றும் பஜனைகள்
மதர்ஸ் ஃப்ளவர் கார்டன் (சோலார் கிச்சன் அருகில், ஆரோவில்). வாராந்திர நிகழ்வுகள் - அனைவரும் வருக.



## சாதனா ஃபாரஸ்ட்டில் வெள்ளிக்கிழமை தோறும் ஈக்கோ பிலிம் கிளப் (Eco Film Club, every Friday at Sadhana Forest)

நிகழ்வுகளின் அட்டவணை:
16:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு சென்று பார்க்க இலவசப் பேருந்து
16:30 சாதனா ஃபாரஸ்ட்டை சுற்றிப்பார்த்தல்
18:00 சோலார் கிச்சனிலிருந்து சாதனா ஃபாரஸ்ட்டிற்கு ஈக்கோ பிலிம் கிளப்பிற்கு இலவச பேருந்து
18:30 ஈக்கோ பிலிம் கிளப் ஆனது சாதனா ஃபாரஸ்ட் படங்களின் "முன்னோட்டத்துடன்" தொடங்குகிறது
20:00 இரவு உணவு உபசரிப்பு
21:15 சாதனா ஃபாரஸ்ட்டில் இருந்து சோலார் கிச்சனுக்கு திரும்பிவர இலவசப் பேருந்து

திரைப்படத்திற்கு முன், சரியாக 16:30 மணிக்கு சாதனா ஃபாரஸ்ட்டை முழுவதும் சுற்றிப்பார்க்க எங்களின் மிகச் சமீபத்திய பணிகள் குறித்த தகவல்களைத் தெரிந்து கொள்ள எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்! திரைப்படத்திற்குப் பிறகு, இலவச 100% சைவ இயற்கைமுறை இரவு உணவிற்கு எங்களுடன் சேர உங்களை வரவேற்கிறோம்!

இப்பேருந்து சேவை சாதனா ஃபாரஸ்ட்டால் இயக்கப்படுகிறது. பேருந்து சேவை பற்றிய கூடுதல் தகவலுக்கு சாதனா ஃபாரஸ்ட்டை வாட்ஸ்அப்பில் 8525038274 அல்லது 8122274924 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளவும்.
**குறிப்பு: குடும்பங்கள் மற்றும் குழந்தைகள் வரவேற்கப்படுகிறார்கள்! குழந்தைகளுக்கு இரவு உணவு 19:00 மணிக்கு வழங்கப்படும்.

**திரைப்படக்காட்சி - ஆகஸ்ட் 7, வெள்ளி அன்று - தி லாஸ்ட் எலெபெண்ட்ஸ் ஆஃப் திம்புக்டு (The Lost Elephants of Timbuktu)- 2001/ 40 நிமிடம்/ பிபிசி நேச்சுரல் வேர்ல்ட் தயாரித்தது**

இதில் இளம் ஆராய்ச்சி மாணவி ஆன் ஆர்லாண்டோ, புகழ் பெற்ற நகரமான டிம்புக்டுவின் தெற்கே பாலைவனத்தில் வசிக்கும் யானைக் கூட்டத்தை சுற்றி நடைபெறும் மர்மங்களைத் தீர்க்கும் நம்பிக்கையுடன் ஒரு பயணத்தை தொடங்குகிறாள், அவளது மறக்க முடியாத பயணக்கதையை டேவிட் அட்டன்பரோ இந்த ஆவணப்படத்தில் விவரிக்கிறார்

## ரஞ்சனி-காயத்ரி வழங்கும் இந்தியக் கர்நாடக இசை நிகழ்ச்சி (Indian Classical Music Recital by Ranjani Gayatri)

**மாத்ரிமந்திர் ஆம்பித்தியேட்டர், ஆகஸ்டு 8, சனிக்கிழமை - மாலை 7:30 மணி முதல் இரவு 9 மணி வரை**
அலுவலக கேட் வழியாக உள்ளே நுழையக் கடைசி நேரம்: மாலை 7:15 மணி
விருந்தினர்கள் தங்கள் 'ஆரோகார்டை' உடன் கொண்டு வரவும்; அரங்கத்திற்குள் மட்டுமே அனுமதி உண்டு.
அனைவரும் தங்கள் அலைபேசிகளை வீட்டிலேயே விட்டு வரவும்.
வெளியேறுவதற்கான கடைசி நேரம்: இரவு 9:15 மணி